பக்கங்கள்: 06

THEEMPUNAL

# தீம்புனல்

மாலைப் பதிப்பு




theempunaldaily@gmail.com தீ : 01 புனல்:17 22.11.2023 திங்கட்கிழமை வள்ளுவர் ஆண்டு 2053

# 2024 தேர்தல் ஆண்டு ரணில் அறிவிப்பு

எந்தத் தேர்தலும் ஒத்தி வைக்கப்பட மாட்டாது ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்றத் தேர்தல்கள் இரண்டும் அடுத்த வருடம் நடைபெறும். ஜனாதிபதித் தேர்தல் பாராளுமன்றத் தேர்தல்களுக்குப் பிறகு, மாகாண சபை தேர்தல் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் என்பன நடத்தப்படும் என ஜனாதிபதி ரணில் இன்று பாராளுமன்றத்தில் நிகழ்த்திய விஷேட உரையில் தெரிவித்தார்.

விஷேட உரையில் ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில், அரசியலை கிரிக்கெட்டில் கலக்கவேண்டாம் என ஐ.சி.சி சொல்கிறது. பாராளுமன்றம் அதனை விவாதித்து நீதிபதிகளை ஏசிப்பேசி தவறு செய்துவிட்டது. அப்படி செய்யக்கூடாது. பாராளுமன்ற நீதிமன்ற தீர்ப்புக்களை விமர்சிக்கலாம் ஆனால், நீதிபதிகளை விமர்சிக்கக் கூடாது. நீதிபதிகள் கிரிக்கெட் விவகாரத்தில் தீர்ப்



பளித்தார்கள் என்று சொல்ல முடியாது. அடுத்ததாக அரசியலமைப்பு சபையின் செயற்பாடுகள் பற்றி கூற வேண்டும். சபையின் செயற்பாடுகளை ஆராய பாராளுமன்ற தெரிவுக்குழு அமைக்க வேண்டும். அரசியலமைப்பு சபை முன்னர் ஒருபோதும் இப்படி நடக்கவில்லை என்றார்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு தற்போது இலங்கை வந்துள்ள சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் நிர்வாகி சமந்தா பவருடனான சந்திப்பின் போதும் அவர் தேர்தல் பற்றி கருத்துத் தெரிவித்தார். தேவையான தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து தீர்மானம் எடுப்பதற்கு பாராளுமன்றத்துக்கு 6 மாதகால அவகாசம் வழங்கப்படும். இல்லையெனின், சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி எத்தகைய முறைமை வேண்டும் என்பதை பொது மக்களிடம் கேட்கப்படும்.இதை அரசியல் கட்சிகள் என்றைக்கும் தள்ளிப் போட முடியாது என்றும் அவர்கள் விரும்பவில்லை என்றால், முக்கிய சீர்திருத்தங்கள் குறித்து வாக்கெடுப்புக்கு செல்லவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## கிரிக்கெட் மைதான ஊழியர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பணம் எங்கே? சஜித்

இலங்கையில் உள்ள கிரிக்கெட் மைதான ஊழியர்களுக்கு ஆசிய கிரிக்கெட் பேரவை மற்றும் இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் சிராஜ் நன்கொடையாக வழங்கிய 55,000 டொலர் தொகை இன்னும் அந்த தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இன்று (22) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஆசிய கிரிக்கெட் பேரவையின் தலைவர் ஜெய் ஷா 50,000 டொலர்களையும் இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் சிராஜ் 5,000 டொலர்களையும் நன்கொடையாக வழங்கியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பல்லேகல மற்றும் ஆர். பிரேமதாச மைதானங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு வழங்குவதற்காகவே இந்தப் பணத்தை நன்கொடையாக வழங்கியதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

அந்தப் பணம் எங்கே போனது எனத் தெரியவில்லை எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், விளையாட்டுத்துறை அமைச்சர் தலையிடுமாறு கோரிக்கை விடுப்பதாகவும் தெரிவித்தார்.

## சிறைச்சாலைக்குச் சென்று வாக்குமூலம் பெற்ற யாழ்.நீதவான்

வட்டுக்கோட்டை இளைஞனின் மரணத்தை விசாரித்துவரும் யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான், சிறைச்சாலைக்கு நேரில் சென்று வாக்குமூலங்களை பெற்றுக்கொண்டார்.

உயிரிழந்த இளைஞனுடன் கைது செய்யப்பட்ட மற்றைய இளைஞனிடமும் வாக்கு மூலம் பெற்றுக்கொள்வ தற்காக நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை (24.11. 2023) மன்றில் முன்னிலையாகுமாறு மற்றைய இளைஞனுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞன் பொலிஸாரின் சித்திரவதை காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளார்.

இளைஞனின் உடற்கூற்று பரிசோதனைகள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மதியம் யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றுள்ளது.

சட்ட வைத்திய அதிகாரி உ.மயூரதன் பரிசோதனைகளை மேற்கொண்ட போது, நீதவான், வைத்தியசாலைக்கு நேரில் சென்று சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிசோதனைகள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டுள்ளார்.

இதேவேளை உயிரிழந்த இளைஞனுடன் கைதான மற்றைய இளைஞன் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை (21.11.2023) முற்படுத்தப்பட்ட நிலையில் நீதிமன்றினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# லஞ்ச் ஷீட், பத்திரிகைகளை சாப்பிட வைத்த அதிபரால் மாணவர்கள் பாதிப்பு

நாவலப்பிட்டி வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கும் கல்லூரி ஒன்றில் மதிய உணவை லஞ்ச் ஷீட் சுற்றிக்கொண்டு வந்த மாணவர்களில் ஏழுபேரை பிடித்த பாடசாலையின் அதிபர், அந்த லஞ்ச் ஷீட்டையும் பேப்பரையும் உட்கொள்ளுமாறு வற்புறுத்தியமையால், அதனை உட்கொண்ட இரண்டு மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அந்தக்கல்லூரியில் 11 ஆம் ஆண்டு படிக்கும் ஏழு மாணவர்கள் லஞ் சீட், பத்திரிகைகளில் பகல் உணவைக் கொண்டு வந்தனர். மதியம் சாப்பிட்டுவிட்டு அவற்றை வீட்டுக்கு எடுத்துச் செல்லத்தயாரானபோது அங்கு வந்த அதிபர் அவற்றை சாப்பிடும் படி வற்புறுத்தினார். அவர்கள் லஞ்ச் ஷீட், பத்திரிகைகளை தின்றுவிட்டனர். லஞ்ச் ஷீட்டில் மற்றும் செய்தித் தாள்களை சாப்பிட்ட ஏழு மாணவர்களில் ஒருவர் 21 ஆம் திகதியும் மற்றுமொரு மாணவன் 22 ஆம் திகதியும் நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையில் பெற்றோரால் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் மாணவனின் தந்தை, நாவலப்பிட்டி பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் நாவலப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# சவூதியில் சித்திரவதைக்குள்ளான பெண் நாடு திரும்பினார்



சவூதி அரேபியாவிற்கு பணிப்பெண்ணாக சென்று பல்வேறு இன்னல்களை அனுபவித்த மத்துகம-நெபட பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான இராமசந்திரன் தர்ஷனி இராமசந்திரன் தர்ஷனி இன்று (22) நாட்டை வந்தடைந்தார். சவூதி அரேபியாவில் பணியாற்றிய வீட்டில் துன்புறுத்தல்களுக்கு இலக்கான நிலையில், இராமசந்திரன் தர்ஷனி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

பல்வேறு இன்னல்களை அனுபவித்த நிலையிலேயே தான் நாட்டை வந்தடைந்ததாக அவர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், சலவை இயந்திரம் வைக்கப்பட்டிருந்த அறைக்கு அழைத்து சென்று என்னைத் தாக்கினார்கள்.

கீழே தள்ளி என்னைத் தாக்கினார்கள். இரண்டு ஆணிகள், இரும்புத் துண்டொன்றை கையில் கொடுத்து உட்கொள்ளுமாறு கூறினார்கள். இல்லையென்றால், தங்க நகைகளைத் திருடியதாக தெரிவித்து, பொலிஸிற்கு பிடித்து கொடுப்பதாக கூறினார்கள். நான் ஆணிகளை உட்கொண்டேன். ஒரு ஆணி தொண்டையில் சிக்கியது. எனக்கு மூச்சு திணறல் ஏற்பட்டது என சவூதி அரேபியாவில் பாதிக்கப்பட்டதாக கூறப்படும் பணிப் பெண்ணான இராமசந்திரன் தர்ஷனி தெரிவித்தார்.

# அதிவேக நெடுஞ்சாலை ஊழியர்கள் வேலை நிறுத்தம்

அகில இலங்கை அதிவேக நெடுஞ்சாலை ஊழியர் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள 24 மணித்தியால அடையாள வேலைநிறுத்தத்திற்கு பதிலளிக்கும் வகையில், அதிவேக நெடுஞ்சாலைகளில் டிக்கெட் கவுன்டர்களை நிர்வகிப்பதற்கும் பாதுகாப்பை வழங்குவதற்கும் முப்படையினரையும் பொலிஸாரையும் ஈடுபடுத்தியுள்ளதாக பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நடவடிக்கைக்கு ஒரு நாள் முன்னதாகவே தொழிற்சங்கம் வேலை நிறுத்தம் பற்றி அதிகாரிகளுக்கு அறிவித்ததாகவும் தயாரிப்புக்கு சிறிது நேரம் மட்டுமே அனுமதித்ததாகவும் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.



டிக்கெட் வழங்கும் இயந்திரங்களை தொழிற்சங்கம் எடுத்துச் செல்வது, அட்டைகளை வழங்காதது போன்ற சவால்கள் இருந்தபோதிலும், முப்படை வீரர்களைக் கொண்டு பணிகள் சுமூகமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தெற்கு அதிவேக வீதியில் இராணுவத்தினரும் கட்டுநாயக்க அதிவேக வீதியில் விமானப்படையினரும் மத்திய அதிவேக வீதியில் (குருநாகல்) கடற்படையினரும் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அனுப்பப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நெடுஞ்சாலை வலையமைப்பை தனியார் மயமாக்குவது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து அகில இலங்கை அதிவேக நெடுஞ்சாலை ஊழியர் சங்கம் இன்று வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளது.

# பிரான்ஸ் தூதரகத்துக்கு 50 தொலைபேசி அழைப்பு எடுத்தவர் கைது

பிரான்ஸ் தூதரகத்துக்கு 50 தொலைபேசி அழைப்புகளை எடுத்து தூதரக நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த சந்தேக நபரையே எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் நேற்று (21) உத்தரவிட்டார்.

பிரான்ஸ் தூதரகத்தின் அதிகாரி ஒருவர் செய்த முறைப்பாட்டின்படி, விசாரணைகளை மேற்கொண்ட குருந்துவத்தை பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்தனர்.

## மண் சரிவால் ரயில் சேவைகள் பாதிப்பு

ஒஹியவிற்கும் இந்தல்கஸ்ஹின்னவிற்கும் இடையில் புகையிரத தண்டவாளத்திற்கு மண் மேடு சரிந்து வீழ்ந்தமையினால் மலையகப் பகுதிக்கான ரயில் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த இரவு தபால் புகையிரதம் ஒஹிய புகையிரத நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளதாக புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த உடரட மெனிகே ரயில் ஹப்புத்தளை நிலையத்தில் நிறுத்தப்பட்டுள்ளது என புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

## 10 ஆம் ஆண்டில் க.பொ.த சாதாரணப் பரீட்சை

4 வயதைப்பூர்த்தி செய்த பிள்ளைகளை கட்டாயம் முன்பள்ளியில் சேர்க்க வேண்டும். 10 ஆம் ஆண்டில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. 17 வயதில் மாணவன் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் பாராளுமன்றத்தில் இன்று (22) கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போது என கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தெரிவித்தார்.

## கோடா கசிப்புடன் ஒருவர் கைது

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரான்பற்று பகுதியில் 200 லீற்றர் கோடா 5 லீற்றர் கசிப்பு ஆகியவற்றுடன் 47 வயதுடைய சந்தேகநபர் ஒருவரை காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்தனர்.

## உக்ரைனில் 10,000ற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்

ரஷ்யாவின் முழு அளவிலான படையெடுப்பிற்குப் பிறகு உக்ரைனில் 10,000 இற்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர், சமீபத்திய இறப்புகளில் பாதி பேர் முன்னணியில் இருந்து மிகவும் பின்தங்கியுள்ளதாக ஐ.நா மனித உரிமைகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

உக்ரைனில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் பணி, நாட்டில் டஜன் கணக்கான கண்காணிப்பாளர்கள் உள்ளனர், உறுதிப்படுத்தும் பணிகள் தொடர்வதால், உத்தியோகபூர்வ எண்ணிக்கையை விட உண்மையான எண்ணிக்கை "கணிசமாக- அதிகமாக" இருக்கும் என்று எதிர்பார்க்கிறது. படையெடுப்பிற்குப் பிறகு முதல் மாதங்களில், மரியுபோல் கட்டுப்பாட்டிற்கான போர் போன்ற நிகழ்வுகள் இதில் அடங்கும்.

## இஸ்ரேல் தாக்குதலில் 15 பேர் பலி

காஸாவின் தென்பகுதியான கான் யூனிஸிலுள்ள அடுக்குமாடி குடியிருப்பில் செவ்வாய் இரவு இஸ்ரேலிய தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டனர், 22 பேர் காயமடைந்தனர். பாதிக்கப்பட்டவர்களும் காயமடைந்தவர்களும் நாசர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

## அமெரிக்காவில் போக்குவரத்து பாதிப்பு

வட கரோலினா கடற்கரையில் இடி, மழை, பனி மழை, பனி மற்றும் சாத்தியமான சூறாவளி காரணமாக அமெரிக்காவின் கிழக்குப் பகுதி முழுவதும் விமானங்கள், ரயில்கள் ஆகியன இரத்துச் செய்யப்பட்டன

மிசிசிப்பி முதல் வர்ஜீனியா வரையிலான 27 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கடுமையான புயல் அபாயத்தை எதிர்கொள்கின்றனர், இது கிழக்கு நோக்கி நகர்வதால், நியூயோர்க் வாஷிங்டன் போன்ற மாநிலங்களில் அச்சுறுத்தல் உள்ளது.

இது புதன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளுக்கு இடையில் தங்கள் வசிப்பிடங்களிலிருந்து குறைந்தது 50 மைல்கள் பயணிக்கும் என்று கணித்த 55.4 மில்லியன் அமெரிக்கர்களுக்கு பயணச் சிக்கல்களை ஏற்படுத்தலாம்.

## லெபனானில் இரண்டு பத்திரிகையாளர்கள் பலி

தெற்கு லெபனானில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், பெய்ரூட்டை தளமாகக்கொண்ட அல்-மயாதீன் தொலைக்காட்சியில் இஸ்ரேல் எல்லையில் நடந்த வன்முறை குறித்து செய்தி வெளியிட்ட இரண்டு பத்திரிகையாளர்கள் செவ்வாயன்று கொல்லப்பட்டதாக லெபனான் தகவல் அமைச்சும், தொலைக்காட்சி நிலையமும் தெரிவித்தன.

லெபனான் போராளிக் குழுவான ஹிஸ்புல்லாவுடன் அரசியல் ரீதியாக இணைந்திருக்கும் Pan-Arab Al-Mayadeen TV செய்தியாளர்களை நிருபர் பரா ஓமர், ஒளிப்பதிவாளர் ரபீஹ் மாமாரி ஆகியோரே இஸ்ரேலின் தாக்குதலில் கொல்லப்பட்டவராவர்.

## லெபனானுக்கு பாதுகாப்பு வழங்க வாக்னர் தயாராகிறது



லெபனானின் ஹெஸ்பொல்லா போராளிகளுக்கு அல்லது தெஹ்ரானிலுள்ள ஆட்சிக்கு வான் பாதுகாப்பு அமைப்பை வழங்க ரஷ்யாவின் வாக்னர் கூலிப்படை குழு திட்டமிட்டுள்ளது, இது இரண்டு அமெரிக்க எதிரிகளுக்கு இடையேயான "முன்னோடியில்லாத பாதுகாப்பு ஒத்துழைப்பின்" ஒரு பகுதியாகும்.

ரஷ்ய அரசாங்கத்தின் வழிகாட்டுதலின்படி, ஹெஸ்பொல்லா அல்லது ஈரானுக்கு வான் பாதுகாப்புத் திறனை வழங்கத் தயாராகி வருகிறார் என்று அமெரிக்க தேசிய பாதுகாப்பு கவுன்சில் செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி செய்தியாளர்களிடம் கூறினார்.

## ஹமாஸ் தலைவரின்
## பேரன் ஜமால் கொல்லப்பட்டார்



ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியாவின் மூத்த பேரன் ஜமால் முஹம்மது ஹனியே இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சில வாரங்களுக்கு முன்பு, இதேபோன்ற குண்டு வெடிப்பில் காஸா பல்கலைக்கழகத்தில் மருத்துவ மாணவியான இஸ்மாயில் ஹனியேவின் பேத்தி ரோவா ஹனியே கொல்லப்பட்டார். தற்போது நடைபெற்று வரும் இஸ்ரேல்-ஹமாஸ் போரில் ஹனியே தனது உறவினர்களை அதிகம் இழந்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

காஸாப் பகுதியிலுள்ள ஹனியேவின் சொத்துக்களையும் இஸ்ரேலிய போர் விமானங்கள் குறி வைத்தன.

## லஷ்கர்–இ–தொய்பாவை தடை செய்தது இஸ்ரேல்

மும்பையில் கடந்த 2008 ஆம் ஆண்டில் லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாத அமைப்பு நடத்திய தாக்குதலில் இஸ்ரேல் நாட்டவர் உட்பட 175 பேர் கொல்லப்பட்டனர். இதன் 15 ஆவது ஆண்டு நினைவுதினம் வர உள்ளது. இந்நிலையில், லஷ்கர்-இ-தொய்பாவை இஸ்ரேல் தடை செய்துள்ளது.

டெல்லியிலுள்ள இஸ்ரேல் தூதரகம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கூறியிருப்பதாவது:

கடந்த 2008 நவம்பரில் அமைப்பால் நடத்தப்பட்ட பயங்கரத் தாக்குதல் மற்றும் அதன் கொடூரமான நடவடிக்கைகள், அமைதியை நாடும் நாடுகள் மற்றும் சமூகங்களில் இன்னும் எதிரொலிக்கின்றன.

லஷ்கர்-இ-தொய்பாவைத் தடைசெய்யுங்கள் என்று இந்தியாவின் தரப்பில் கோரிக்கை வரவில்லையென்றாலும் அதை நாங்களாகவே தடை செய்துள்ளோம். தீவிரவாதத்தை வேரறுக்க உலக நாடுகளுடன் இணைந்து இஸ்ரேல் எப்போதும் போரிடும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## பாகிஸ்தான் ட்ரோன் வீசிய 565 கிராம் ஹெரோயின்

பஞ்சாப்பின் அமிர்தசரஸ் மாவட்டத்திலுள்ள மோட் கிராம பகுதியில் பாகிஸ்தான் ட்ரோன் மூலம் ஹெரோயின் கடத்தல் நடைபெறவுள்ளதாக எல்லைப் பாதுகாப்புப்படையினருக்கு (பி.எஸ்.எஃப்) தகவல் கிடைத்தது.

இதையடுத்து தீவிர கண்காணிப்புப்பணியில் ஈடுபட்ட பி.எஸ்.எஃப் வீரர்கள், நேற்று முன்தினம் இரவு பாகிஸ்தான் பகுதியில் இருந்து நுழைந்த ட்ரோன் ஒன்றை இடைமறித்து அழிக்க முயன்றனர். ஆனால், அதற்குள் அந்த ட்ரோன் பொட்டலம் ஒன்றை வீசிவிட்டு திரும்பிச் சென்றது. அப் பகுதியில் பி.எஸ்.எஃப் வீரர்கள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது பொட்டலம் ஒன்றில் 565 கிராம் ஹெரோயின் இருந்தது.



“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
THEEMPUNAL தீம்புனல்

# கஞ்சாவை சட்டபூர்வமாக்குவற்கு மருத்துவர்கள் எதிர்ப்பு

**எந்தவொரு வடிவத்திலும் கஞ்சாவை சட்டபூர்வமாக்குவதற்கான முயற்சிகளை அங்கீகரிக்கவில்லை என்று கூறி, இலங்கை மனநல மருத்துவர்கள் கல்லூரி அத்தகைய சட்டபூர்வமாக்கலை மேற்கொள்வதற்கு முன்னர் துறையிலுள்ள நிபுணர்களால் உன்னிப்பாக ஆராயப்பட வேண்டும் என்று கூறியது.**

**அதன் தலைவர் கலாநிதி சஜீவன அமரசிங்க கையொப்பமிட்ட அறிக்கையில், கஞ்சா சட்டபூர்வமாக்கப்படும் நிகழ்வில் பல ஆதார அடிப்படையிலான தாக்கங்கள் ஏற்படக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**கவனம், நினைவகம், செயலாக்க வேகம், காட்சி-வெளிசார் செயல்பாடு மற்றும் ஒட்டுமொத்த நுண்ணறிவு உள்ளிட்ட இளைஞர்களின் அறிவாற்றல் செயல்பாடுகளில் பாதகமான விளைவுகள் பாதிக்கப்படக்கூடிய நபர்களில் மனநோய்களை உருவாக்கும் ஆபத்து மனநோய்களின் அறிகுறிகள் மோசமடைதல் மற்றும் மனநோயால் பாதிக்கப்பட்டவர்களின் செயல பாட்டு விளைவுகள் கஞ்சா, கோகோயின், மெத்தாம்பேட்ட மைன் மற்றும் ஹெராயின் போன்ற பல மனநலப் பொருட்களுக்கு நுழைவாயில் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது மற்றும் இனப்பெருக்க வயது இளம் பெண்களுக்கு பாதகமான விளைவுகள்.**

**நாட்டின் சில பகுதிகளில் மனநோய்களுக்கான சிகிச்சை இடைவெளி தற்போது 67% ஆக இருப்பதாக குறிப்பிட்டுள்ள, நாட்டின் மனநல சுகாதார சேவைகளால் ஏற்படக்கூடிய நோய் சுமை அதிகரிப்பை சமாளிக்க முடியாது என்று எச்சரித்தது. கஞ்சாவை சட்டபூர்வமாக்கும் எந்த வகையிலும்.**

**“எந்தவொரு மனநலக் கோளாறுக்கும் சிகிச்சையில் கஞ்சா எந்த வகையிலும் நன்மை பயக்கும் என்பதற்கு அறிவியல் சான்றுகள் இல்லை. இருப்பினும், கஞ்சா பயன்பாட்டிற்கும் ஸ்கிசோஃப்ரினியா போன்ற கடுமையான மனநலக் கோளாறுகளின் தொடக்கத்திற்கும் இடையே ஒரு வலுவான தொடர்பு இருப்பதாக கிடைக்கக்கூடிய சான்றுகள் ஆதரிக்கின்றன. பயன்பாடு பலவிதமான மனநோய்களின் அறிகுறிகளின் காரணம் மற்றும் பராமரிப்புடன் தொடர்புடையது.”**

**கஞ்சாவை வழக்கமாகப் பயன்படுத்துபவர்கள் அல்லது தங்கள் வாழ்க்கையின் ஆரம்பத்தில் கஞ்சாவைப் பயன்படுத்தத் தொடங்குபவர்கள், குறைந்த அளவிலான கல்வி, வறுமை, வேலையின்மை போன்ற எதிர்மறையான உளவியல் சமூக விளைவுகளுக்கு அதிக ஆபத்தில் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**நோய் பாதிப்பு மற்றும் பொருளாதாரச் சுமை அதிகரிப்பதற்கான ஆதாரங்களைக் கருத்தில் கொண்டு, கஞ்சாவை சட்டபூர்வமாக்குவதற்கான எந்தவொரு வடிவத்தின் செலவுத் திறனையும் உன்னிப்பாக ஆராய வேண்டும் என்று அது கூறியது.**

**“எந்த வகையிலும் கஞ்சாவை சட்டபூர்வமாக்குவதற்கான முயற்சிகளை நாங்கள் அங்கீகரிக்கவில்லை மேலும் அத்தகைய சட்டபூர்வமாக்கலை மேற்கொள்வதற்கு முன், துறையில் உள்ள நிபுணர்களால் நுணுக்கமான ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட வேண்டும்” என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**சித்த வைத்தியத்தில் அபின் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. கஞ்சா எனும் போதைப் பொருளை இல்லாதொழிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.**

# அனர்த்தத்தைக் கட்டுப்படுத்த திரண்ட மக்கள்

வெள்ள அனர்த்தத்தைக் கட்டுப்படுத்தும் எதிர்பார்புடன் முறிகண்டி மக்கள் இன்று சிரமதானம் செய்தனர்.





பிரதான வாய்க்கால்களில் காணப்படும் பற்றைகளினால் உக்கும், உக்காத பொருட்கள் அடைபட்டு வெள்ளநீர் மக்கள் குடியிருப்புகளிற்குள் புகுந்து வருகின்றது.

இதன் காரணமாக மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வரும் நிலை ஏற்பட்டதுடன், போக்குவரத்து செய்வதிலும் பாதிப்பு ஏற்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், முறிகண்டி வர்த்தகர் சங்கம், கிராம மட்ட அமைப்புக்கள் பொது மக்களுடன் இணைந்து சிரமதானப் பணியை இன்று ஆரம்பித்துள்ளனர்.

பிரதான வாய்க்கால்களில் காணப்பட்ட பற்றைகள் அகற்றப்பட்டுள்ளது. பெரும் தொகையான பிளாஸ்ரிக் போத்தல்கள் அகற்றப்பட்டு பிரதேச சபையினர் ஊடாக வெளியேற்றப்பட்டது.

வெள்ளநீர் தடையின்றி வாய்க்கால்கள் ஊடாக கடந்து செல்லும் வகையில் முன்னெடுக்கப்படும் சிரமதானப் பணி ஊடாக வெள்ள அனர்த்தம் கட்டுப்படுத்தப்படும் என நம்பிக்கை வெளியிடப்படுகிறது.

# நீதிமன்றத்தின் மீது கல் வீச்சு வழக்கில் இருந்து விலகிய நீதிபதி

*யாழ்ப்பாண நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு கல் வீசிய சம்பவத்தில் தொடர்புபட்ட வழக்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதியாக தற்போது கடமையேற்று இருக்கும் நீதிபதி டீ.சூசைதாசன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது, தனது தனிப்பட்ட காரணங்களால் இந்த வழக்கு விசாரணைகளில் இருந்துதான் விலகிக்கொள்வதாகத் தெரிவித்து விலகி கொண்டுள்ளார்.*

*கடந்த 2015 ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி புங்குடுதீவு மாணவி படுகொலை செய்யப்பட்ட போது விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சந்தேக நபர்களை கைது செய்து 21 ஆம் திகதி யாழ்.நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்ட நிலையில், நீதிமன்றச் சூழலில் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதுடன், பலரும் கூடி இருந்தனர்.*

*அந்நிலையில் ஆர்ப்பாட்ட போராட்டம் வன்முறையாக உருமாறி நீதிமன்ற கட்டடத் தொகுதி மீது கல் வீச்சு இடம்பெற்றது. தொடர்ந்து நீதிமன்ற வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த சட்டத்தரணிகளின் வாகனங்கள், சிறைச்சாலை வாகனம், நீதிமன்றுக்கு அருகில் இருக்கும் சுப்பிரமணிய பூங்கா உடைமைகள், யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக இருந்த பொலிஸ் காவலரண் என்பவை சேதமாக்கப்பட்டன.*

*இவை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சுமார் 300 இற்கும் மேற்பட்டவர்களை கைது செய்து, நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு கல் வீசியமை, சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை, பொலிஸ் நிலையம் மீது கல்வீசியமை ஆகிய மூன்று குற்றச்சாட்டுக்களின் கீழ் வழக்குத் தொடர்ந்து சந்தேக நபர்களை மன்றில் முற்படுத்தி, வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.*

*அந்நிலையில் நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு கல் வீசிய வழக்கு விசாரணை சட்டமா அதிபர் திணைக்களத்தால் யாழ்.மேல் நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டதை அடுத்து, மேல் நீதிமன்றில் வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்தன.*

*நீதிமன்ற பதிவாளரால், பிரதம நீதியரசருக்கு அறிவிக்கப்பட்டு, புதிய நீதிபதி ஒருவர் குறித்த வழக்கு விசாரணைகளை முன்னெடுப்பார்.*

*அதேவேளை சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை மற்றும் பொலிஸ் நிலையம் மீது தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் யாழ்.நீதவான் நீதிமன்றில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.*

# பத்திரிகைச் செய்தியால் துப்புரவான பஸ் தரிப்பிடங்கள்

திருகோணமலை மாவட்ட கோபாலபுரம் ஆயுள்வேத வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள பஸ் தரிப்பிடம் கடந்த பல மாதங்களாக யாரும் கவனிப்பாரற்ற நிலைமையில் இருந்தது. பஸ் தரிப்பிட அவலம் பற்றிய செய்தி படங்களுடன் பிரசுரமாகியதன் பின்னர், குச்சவெளி பிரதேச சபைக் குட்பட்ட அனைத்து பஸ் தரிப்பிடங்களும் சுத்தம் செய்யப்பட்டுள்ளன.



பஸ் தரிப்பிட அவலங்கள் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்திற்கு வந்ததையடுத்து, குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து பஸ் தரிப்பிடங்களும், அதனைச் சுற்றியுள்ள இடங்களும் சுத்தம் செய்யப்பட வேண்டும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் விடுத்த உத்தரவுக்கமைவாகவே இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

# சீன–இலங்கை ஒப்பந்தம் குறித்து IMF மகிழ்ச்சி



இலங்கைக்கும் சீன எக்சிம் வங்கிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள உடன்படிக்கை இலங்கையின் வெளிநாட்டுக் கடனை மறுசீரமைப்பதில் நல்லதொரு முன்னேற்ற நடவடிக்கை என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

அனைத்து உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களிடமிருந்தும் நிதி உத்தரவாதங்களைப் பெற்றவுடன், சர்வதேச நாணய நிதியம் முதல் மதிப்பாய்வுக்குத் தயாராக உள்ளது என்று அதன் சிரேஷ்ட பணிச்சபையின் தலைவர் பீட்டர் ப்ரூவர் கூறியுள்ளார்.

# கோட்டை நீதவான் நீதிமன்றப் பதிவாளருக்கு மீண்டும் விளக்கமறியல்

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட கோட்டை நீதவான் நீதிமன்றப் பதிவாளர் உள்ளிட்ட 3 சந்தேக நபர்களும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

போலி ஆவணம் தயாரித்து குற்றவாளியாகக் காணப்பட்ட சந்தேக நபரின் பயணத் தடையை நீக்கியதாகக் கூறி அவர் கைது செய்யப்பட்டார்.

# சனத் நிஷாந்த 2 வாரங்களுக்கு இடைநிறுத்தம்

பாராளுமன்றில் நேற்று (21) இடம்பெற்ற ஒழுங்கீனச் செயலை வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்த சபாநாயகர், சனத் நிஷாந்த இன்று முதல் 2 வாரங்களுக்கு பாராளுமன்றத்திற்கு வருவதை இடைநிறுத்துவதாகவும் தெரிவித்தார்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 146 இன் பிரகாரம் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அது இன்று (22) முதல் அமுலுக்கு வரும் எனவும் சபாநாயகர் தெரிவித்தார்.

# மண்சரிவில் 4 கடைகள் சேதம் ஒருவர் பலி

கண்டி-கொழும்பு வீதியில் பேராதனை நகரில் நேற்று (21) இரவு ஏற்பட்ட மண்சரிவில் கடைகள் சேதமாகின ஒருவர் பலியானார்.

அந்தப் பகுதியில் முன்னரும் மண்சரிவு ஏற்பட்டதால், கடைக்காரர்களை அங்கிருந்து வெளியேறுமாறு அறிவுறுத்தப்பட்டதாகவும் ஆனால் அவர்கள் அவ்விடத்தை விட்டு வெளியேறாததால் விபத்து ஏற்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

அப்பகுதியில் பாதிப்புக்குள்ளாகும் கடைகள் சில உள்ளதாகவும் அவர்களை அங்கிருந்து உடனடியாக வெளியேறுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

# தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் கார்த்திகை வாசம் இன்று ஆரம்பம்

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் கார்த்திகை வாசம் என்ற பெயரில் நடாத்தி வரும் மலர்க்கண்காட்சி இன்று புதன் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சங்கிலியன் பூங்காவில் ஆரம்பமாகும். கௌரி முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இத்தொடக்க நிகழ்ச்சியில் சிறப்புரைஞர்களாக வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், சமூக அரசியல் செயற்பாட்டாளர் க.அருந்தவபாலன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடாத்தும் இக்கண்காட்சி இம்மாதம் 30 ஆம் திகதி வரை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் முன்னிரவு 7.00 மணி வரை நடைபெறவுள்ளது. கண்காட்சியைப் பார்வையிடவரும் மாணவர்களுக்கு வழமை போன்று இம்முறையும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் இலவசமாக மரக்கன்றுகளை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் ஏழு கடைகளில் திருட்டு

வவுனியா, கண்டி வீதியில் அமைந்துள்ள பிரதி பொலிஸ்மா அதிபர் காரியாலயம் முன்பாகவுள்ள ஏழு கடைகளில் 20 ஆம் திகதி இரவு பொருட்கள் பணம் புகார் செய்யப்பட்டுள்ளது.

வவுனியா, கண்டி வீதியில் வன்னிப் பிராந்திய பிரதிப்பொலிஸ்மா அதிபர் காரியாலயத்திற்கு முன்பாக உள்ள வியாபார நிலையங்களின் கதவுகளை உடைத்து உள் நுழைந்த திருடர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த பணத்தை திருடிச் சென்றுள்ளனர். இது தொடர்பில் வியாபார நிலைய உரிமையாளர்கள் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டையடுத்து சிசிரீவி கமராக்களின் உதவியுடன் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# கிழக்கு மாகாணத்தில் ஓட்டிசப்பிரிவு சிகிச்சை ஆரம்பம்

கிழக்கு மாகாணத்தில் முதன் முறையாக சுதேச மருத்துவத்துறையில் ஓட்டிசப் பிரிவொன்று, நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட ஓட்டிசப்பிரிவு திறப்புவிழா கடந்த கல்முனைப் பிராந்திய ஆயுள்வேத இணைப்பாளரும் நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ. நபீல் தலைமையில் நடைபெற்ற போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்து வைத்தார்.

கிழக்கு மாகாண நிதியின் கீழ் சுமார் 18.5 மில்லியன் ரூபாவில் நிர்மாணிக்கப்பட்ட ஓட்டிசப் பிரிவு மற்றும் பக்கவாதப் பிரிவு போன்ற இரு பிரிவுகளையும் திறந்து வைத்த ஆளுநர், அங்குள்ள சிறுவர்களுக்கு சுதேச மருத்துவ திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட ஆயுள்வேத சத்துமா பிஸ்கட்களையும் வழங்கினார்.

கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்ட முதலாவது ஓட்டிசப்பிரிவு சிகிச்சைப் பிரிவு இதுவாகும்.



# 60 வினாடி தாமதமானால் 5 ஓட்டங்கள் கழிக்கப்படும் ஐ.சி.சி அதிரடி அறிவிப்பு

சர்வதேச கிரிக்கெட்டில் காலத்தின் வளர்ச்சிக்கேற்ப அடிப்படை விதிமுறைகளில் ஐ.சி.சி அவ்வப்போது தேவையான மாற்றங்களை செய்வது வழக்கமாகும். அந்த வகையில் நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்குள் போட்டி முடிய வேண்டும் என்பதற்காக கொடுக்கப்பட்ட நேரத்தைத் தாண்டி பந்து வீசும் அணிகளுக்கு சம்பளத்திலிருந்து குறிப்பிட்ட சில தொகையை அபராதமாக ஐ.சி.சி விதித்து வருகிறது. ஆனால், அதையும் தாண்டி அனைத்து அணிகளும் தொடர்ந்து மெதுவாக பந்து வீசுவதை வழக்கமாக வைத்திருக்கின்றன. இந்நிலையில் அதைக் கட்டுப்படுத்துவதற்காக ஐ.சி.சி புதிதாக ஒரு விதிமுறையைக் கொண்டு வரவுள்ளது. அதாவது ஒரு இன்னிங்ஸில் ஒரு அணியின் பவுலர் ஒரு ஓவரை வீசி முடித்த பின் அதற்கடுத்த பவுலர் அடுத்த ஓவரை வீசுவதற்கு 60 நொடிக்குள் வர வேண்டும். அதை மீறும் பட்சத்தில் களத்தில் இருக்கும் நடுவர்கள் அதிகாரபூர்வமாக 2 முறை எச்சரிக்கை விடுப்பார்கள்.

அதையும் தாண்டி 3 ஆவது முறையாக பவுலர் 60 வினாடிகளைக் கடந்து பந்து வீசுவதற்காக வரும் பட்சத்தில் அதற்கு தண்டனையாக அந்த அணிக்கு 5 ரன்கள் பெனால்டி வழங்கப்படும். இந்த 60 நொடிகளை கண்காணிப்பதற்காக களத்தில் இருக்கும் நடுவர்களுக்கு ஸ்டாப் வாட்ச் கொடுக்கப்படும் என்றும் ஐ.சி.சி அறிவித்துள்ளது. இந்த விதிமுறை வெள்ளோட்டமாக வரும் டிசம்பர் 2023 முதல் ஏப்ரல் 2024 வரை ஒருநாள் மற்றும் ரி20 போட்டிகளில் மட்டும் கொண்டு வரப்பட உள்ளதாக ஐ.சி.சி தெரிவித்துள்ளது. அது வெற்றிகரமாக செயல்படுத்தப்படும் பட்சத்தில் வருங்காலங்களில் டெஸ்ட் உட்பட அனைத்து வகையான சர்வதேச கிரிக்கெட்டிலும் இந்த விதிமுறை நிரந்தரமாக்கப்படும் என்றும் ஐ.சி.சி கூறியுள்ளது.




மைதானங்களில் இருக்கப்படும் பிட்ச் மற்றும் வெளிப்புற களங்களில் மாற்றங்கள் ஏற்படும் பட்சத்தில் அந்த மைதானத்திற்கு 5-6 புள்ளிகள் வழங்கப்படும் என்றும் ஐ.சி.சி அறிவித்துள்ளது.

குறிப்பாக, போட்டி சமநிலையாக நடைபெறுவதை உறுதி செய்வதற்காக இந்த விதிமுறை கொண்டு வருவதாக ஐ.சி.சி தெளிவுபடுத்தியுள்ளது. அத்துடன் சர்வதேச கிரிக்கெட்டில் 2024 ஜனவரி முதல் ஆண்கள், பெண்கள் நடுவர்களுக்கு சமமான ஊதியம் வழங்குவதற்கும் ஐ.சி.சி முடிவு எடுத்துள்ளது.

மகளிர் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர்களில் தொடரை நடத்தும் நாட்டுக்கு பதிலாக வெளிநாடுகளில் இருந்து பொதுவான நடுவர்கள் மட்டுமே களத்தில் தீர்ப்புகளை வழங்குவார்கள் என்றும் ஐ.சி.சி கூறியுள்ளது. இதற்கு ஐ.சி.சி தலைமை நிர்வாக இயக்குனர் ஒப்புதல் வழங்கியுள்ளதால் இந்த விதிமுறைகள் விரைவில் நடைமுறைக்கு வர உள்ளது குறிப்பிடத்தக்கது.

# பிறேஸிலை வென்றது ஆர்ஜென்ரீனா

## ஆர்ஜென்ரீன ரசிகர்கள் மீது பொலிஸார் தாக்குதல்

2026 உலகக்கிண்ண தகுதிகாண் போட்டிகள் நடைபெறுகின்றன. பிறேஸிலின் மரகானா மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் பிறேஸில்-ஆர்ஜென்ரீன அணிகள் மோதின. இந்தப் போட்டிக்கு முன்பாக ஆர்ஜென்ரீனா, பிறேஸில் மற்றும் பிரேஸில் ரசிகர்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்டது. ஆர்ஜென்ரீன ரசிகர்கள் மீது பிறேஸில் பொலிஸார் கடுமையாகத் தாக்கினார்கள். அப்போது கப்டன் மெஸ்ஸி, ரோட்ரிக்ஸ், எமிலியானோ மார்டினஸ், ஒட்டோமெண்டி, டீபால் உள்ளிட்ட இன்னும் சில வீரர்களை அழைத்துக் கொண்டு நேராக மோதல் நடக்கும் இடத்திற்கு சென்றார்.




அப்போது முதல் ஆளாக உள்ளே சென்ற கோல்கீப்பர் எமிலியானோ மார்டினஸ் ஆர்ஜென்ரீன ரசிகர்களைத் தாக்கிய பொலிஸாரின் கைகளில் இருந்த லத்தியைப் பிடுங்கி அவர்களை தடுத்தார். அதுமட்டுமல்லாமல் கோபமடைந்த லயோனல் மெஸ்ஸி, தங்களது அணியினரை அழைத்துக் கொண்டு ஓய்வறைக்குச் சென்றார்.

இதனால் 27 நிமிடங்கள் தாமதமாக போட்டி தொடங்கியது. 1-0 என்ற கோல் கணக்கில் ஆர்ஜென்ரீனா வென்றது. பிறேஸிலை சொந்த மண்ணில் வீழ்த்தி சாதனை படைத்தது.

இதன் மூலம் கடந்த 70 ஆண்டுகளில் இரண்டாவது முறையாக பிறேஸில் சொந்த மண்ணில் வீழ்ந்துள்ளது. உலகக்கிண்ண தகுதிகாண் போட்டியில், தொடர்ச்சியாக மூன்றாவது முறை பிறேஸில் தோல்வியடைந்தது.

உலகக்கிண்ண தகுதிச் சுற்றில் முதல்முறையாக சொந்த மண்ணில் தோல்வியடைந்து புள்ளிப்பட்டியலில் ஆறாவது இடத்தைப் பிடித்தது.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 22.11.2023 அன்று வெளியிடப்பட்டது.